# வானவில்

VAANAVIL

| இதழ் 99 | பங்குனி 2019 |
|---|---|
| ISSUE 99 | MARCH 2019 |


# ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான சகல சக்திகளும் ஓரணியில் திரட்டப்பட வேண்டும்!




இலங்கையைப் பொறுத்தவரை இந்த ஆண்டை தேர்தல் ஆண்டு எனக் குறிப்பிடலாம்.

ஏற்கெனவே காலம் முடிந்துபோன பல மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலை இருக்கின்றது. தோல்விப் பயம் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அவற்றுக்குத் தேர்தல் நடத்தாமல் இழுத்தடித்து வருகிறது.

அண்மையில் ஐ.தே.க. அமைச்சர் ஒருவர் இந்த ஆண்டிலும் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடக்காது என்று திமிர்த்தனமாகக் கூறியிருக்கிறார். ஐ.தே.க. அரசு மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கு தோல்விப் பயம் மட்டும் காரணமல்ல.

இனப் பிரச்சினைக்கான தீர்வாக தீவிரமான யுத்தத்துக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாகவே மாகாண சபை முறை உருவாக்கப்பட்டது. அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன வேண்டா வெறுப்பாகவே இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

அவருக்குப் பின் ஐ.தே.க. சார்பில் ஜனாதிபதியான ஆர்.பிரேமதாச, இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் போரிட்ட புலிகளுக்கு சகல வழிகளிலும் உதவியதுடன், ஒன்றிணைந்த மாகாண சபையையும் கலைத்து, இந்திய அமைதிப்படையையும் வெளியேற்றினார். ஆக, ஒட்டுமொத்தமாக ஐ.தே.கவும் புலிகளும் மாகாண சபை முறைக்கு எதிராகவே செயல்பட்டனர்.

இன்று அதே ஐ.தே.க. அரசே பதவியில் உள்ளது. அந்த அரசின் பிரதான பாதுகாவலர்களாக புலிகளின் வாரிசுகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளனர். அதனால்தான் இரு பகுதியினரும் சேர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்து வருகின்றனர்.

ஒரு பக்கத்தில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொண்டே, மறுபக்கத்தில் தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற ஓரளவு அதிகாரப் பகிர்வு அலகான மாகாண சபையை ஒழித்துக்கட்டும் ஐ.தே.க. அரசின் சூழ்ச்சிக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கி வருகின்றது. இந்த விடயத்தில் முன்னாள் வட மாகாண முதலமைச்சரான சி.வி.விக்னேஸ்வரன் கூட மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தாமல் மௌனமாக இருக்கின்றார். எனவே எல்லாத் தமிழ் தேசியவாத சக்திகளின் நோக்கமும் ஒன்றே என்பது புலனாகின்றது.

அதே நேரத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கும் இந்த அரசு, முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் என்று கூறுகின்றது. கடந்த ஆண்டு ஒக்ரோபரில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிட்ட போது அதை எதிர்த்து நீதிமன்றம் சென்ற ஐ.தே.க., ஜனாதிபதி தேர்தலுக்கான காலம் வருவதற்கு முன்பே அதற்கான தேர்தலை முதலில் நடத்த வேண்டும் எனக் கோருவது வேடிக்கையாக இருக்கிறது.

இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1977 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் தலைவரானதும் எதிர்க்கட்சித் தலைவர் சிறீமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமையைப் பறித்ததும் அல்லாமல், உரிய காலத்தில் தேர்தலை நடத்தாது கருத்துக் கணிப்பு என்ற

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

நூறு சிந்தனை மலரட்டும்

# இந்திய மக்களவைத் தேர்தல் - 2019

இந்தியாவின் 29 மாநிலங்களிலும் 7 யூனியன் பிரதேசத்திலுமுள்ள மொத்தம் 543 தொகுதிகளுக்குமான 17வது மக்களவைத் தேர்தல் (பாராளுமன்றத் தேர்தல்) எதிர்வரும் ஏப்ரல் 11ந் திகதி தொடங்கி, மே 19ந் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வாக்குகள் எண்ணும் வேலைகள் மே 23ந் திகதி ஆரம்பிக்கப்பட்டு, அன்றே தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்படவுள்ளது.

இந்தத் தேர்தலில் 8.4 கோடி புதிய வாக்காளர்களுடன் மொத்தம் 90 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதியானவர்களாக உள்ளனர். 2014 ஆம் ஆண்டு 9 இலட்சமாக இருந்த வாக்குச்சாவடிகள், இம்முறை 10 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்தியா முழுவதிலும் கிட்டத்தட்ட 1866 அரசியல் கட்சிகள் போட்டியிடுவதாகத் தெரிய வருகின்றது. தேர்தலுக்காக ஏறத்தாள 8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இந்தத் தேர்தலே, உலகத்தில் அதிக செலவுடன் நடாத்தப்படும் தேர்தலாக அமையுமென்றும் கூறப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக்கட்சி (பாஜக) 282 தொகுதிகளில் வெற்றி பெற்று அறுதி பெரும்பான்மை பெற்றது. ஆனால் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை ஆட்சிபீடத்திலிருந்த இந்திய காங்கிரசுக்கட்சியோ, தனித்து 44 தொகுதிகளில் மாத்திரமே வென்று மக்களவையில் இரண்டாவது பெரிய கட்சியாக உள்ளது.

தமிழகத்தின் 40 மக்களவை தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக ஏப்ரல் 18ஆம் தேதியன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழகத்தில் காலியாக உள்ள 21 சட்டமன்ற தொகுதிகளில் 18 தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் அத்தினத்தில் நடைபெறவுள்ளது.

மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களின் கட்சியான மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்துடன் (திமுக) இணைந்து காங்கிரஸ் கட்சி, விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், இந்திய ஜனநாயகக் கட்சி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி ஆகியன போட்டியிடுகின்றன.

அதேவேளை தமிழ்நாட்டு மாநில தற்போதைய முதல்வரான எடப்பாடி பழனிசாமி (ஈ.பி.எஸ்) – முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் (ஓ.பி.எஸ்) தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் (அதிமுக) இணைந்து பாரதிய ஜனதாக்கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, தேசிய முற்போக்கு திராவிட கழகம், தமிழ் மாநில காங்கிரஸ், புதிய தமிழகம், புதிய நீதிக்கட்சி, என்.ஆர்.காங்கிரஸ் என்பன போட்டியிடுகின்றன. தற்போதைய இந்திய மக்களவையில் 37 ஆசனங்களுடன் அதிமுக மூன்றாவது பெரிய கட்சியாகத் திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

2016 இல் நடந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் அதிமுகவின் வெற்றிக்கு காரணமாக இருந்து, முதல்வராகி, 2017 இல் மறைந்த ஜெயலலிதாவின் பின்னர், அதிமுகவினுள் எழுந்த பலவிதமான உட்பூசல்களின் போது தமிழகத்தில் புதிய தேர்தலொன்றினை அறிவித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாது, ஈ.பி.எஸ் – ஓ.பி.எஸ் அணியினரை இணைத்தும், ஜெயலலிதாவின் நெருங்கிய தோழியெனக் கருதப்படும் சிறையிலுள்ள சசிகலாவையும் அவரது அணியினரையும் அதிமுகவிலிருந்து முற்றுமுழுதாக ஓரங்கட்டுவதற்கும், அதிமுகவின் தேர்தல் வெற்றிச் சின்னமான இரட்டை இலைச் சின்னத்தை மீண்டும் ஈ.பி.எஸ் – ஓ.பி.எஸ் அணியினருக்கே பெற்றுக் கொடுக்கவும் துணைபுரிந்த பாஜக அரசிற்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவே, இம்முறை அதிமுக பாஜகவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதாகத் தெரிகின்றது. இக்கூட்டு பாஜக மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு பலம் சேர்க்குமேன பொதுவாகப் பல தரப்பினரிடையேயும் எதிர்பார்ப்பு ஒன்றினைத் தோற்றுவித்துள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் நடிகர் கமலஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் மற்றும் சிறையிலுள்ள சசிகலாவின் அணியைச் சேர்ந்த டிடிவி தினகரன் தலைமையிலான அம்மா மக்கள் முன்னேற்றக்கழகம் (அமமுக) என்ற இரு புதிய கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஆனால் இதுவரையில் அம்மா மக்கள் முன்னேற்றக்கழக வேட்பாளர்களிற்கு தேர்தல் சின்னம் எதுவும் தேர்தல் ஆணையத்தினால் ஒதுக்கப்படவில்லை. தேர்தலுக்கு இன்னமும் மூன்று வாரங்களே இருக்கும் நிலையில் சின்னம் எதுவுமின்றி தேர்தலில் எப்படி பிரச்சாரம் செய்வதென்று அறியாமல் அமமுக திண்டாடிய வண்ணமுள்ளது. எங்கள் கட்சியில்தான் படித்தவர்களுக்கும், புதியவர்களுக்கும் வாய்ப்பு (வேட்பாளர்களில் 3 டொக்டர்கள், 1 ஐபிஎஸ், 5 வக்கீல்கள் உள்ளனர்) எனக்கூறியவாறு தேர்தலில் இறங்கியுள்ள மக்கள் நீதி மய்யத்தின் மக்கள் ஆதரவு பரீட்சித்துப் பார்க்கப்படவுள்ளது.

இந்த மக்களவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கூட்டணிக்கும் பெரும்பான்மை கிடைக்காதெனவும் பாஜக, காங்கிரஸ் கூட்டணியில் இடம்பெறாத மாநில கட்சிகள்தான் அடுத்த ஆட்சியைத் தீர்மானிக்கும் என்றும் கருத்து கணிப்புகளில் இருந்து தெரிய வருகின்றன. சமீபத்தில் நடந்த ஐந்து மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களிலும் (தெலங்கானா, மிசோராம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம்) பாஜக தோல்வியைத் தழுவியுள்ளதால், 2014 ஆம் மக்களவைத் தேர்தலில் வெற்றிவாகை சூடியது போன்று, பாஜகவிற்கு இந்தத் தேர்தல் அமையாது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்தது. பாகிஸ்தானின் பாலக்கோட்டில் தீவிரவாத முகாம்களை அழித்தோம், விண்வெளியில் இந்திய செயற்கைக்கோள்களை பாதுகாக்கும் வகையில் மிஷன் சக்தி திட்டத்தை வெற்றிகரமாக முடித்திருக்கிறோம் என்று பிரச்சாரங்கள் செய்து பிரதமர் மோடி மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முயற்சி செய்கின்றார்.

பெருகிவரும் வேலைவாய்ப்பின்மை, அதிகரித்து வரும் ஏழை – நடுத்தரவர்க்க இடைவெளி, விவசாயிகளின் தற்கொலைகள், இந்து அடிப்படைவாதம், சாதிக்கொலைகள், பெண்களின் பாதுகாப்பின்மை, ஜம்மு காஷ்மீர் விவகாரம், பணமதிப்பிழப்பால் பாதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரம் போன்ற இன்னோரன்ன இன்றைய இந்தியாவின் பிரதான பிரச்சனைகளைத் தீர்ப்பதையே எதிர்கால ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# அறிவியலும், ஆன்மீகமும் வேறுபடும் இடம் எது?




**கோட்பாட்டு** இயற்பியல் வல்லுநரும், டாட்டா சமூகவியல் ஆய்வு நிறுவன மானுட வாழிடத்துறை (Tata Institute of Social Sciences, School of Habitat Studies) தலைவருமான பேராசிரியர் ரி. ஜெயராமன் அண்மையில் சென்னை வந்திருந்தபோது அளித்த சிறப்பு பேட்டி இது. மக்களிடையே அறிவியல் கண்ணோட்டம் பரவுவதற்கு சவாலாக உள்ள நிலைமைகள், புவி வெப்பத்தைக் கட்டுப்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் பற்றிய கேள்விகளுக்கு பதிலளித்துள்ள இவர், அரசுகளிடையேயான புவிவெப்பப் பேச்சுவார்த்தைக் குழுவில் இந்தியாவின் சார்பில் இடம்பெற்றுள்ளார். இன்றைய சூழலில் இயக்கவியல் பொருள்முதல்வாதம் பற்றிய புரிதலுக்கான முக்கியப் பங்களிப்பைச் செய்துள்ள ஜெயராமன் இந்திய மாணவர் சங்கத்தின் அந்நாள் தலைவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி** : அறிவியலும் தொழில்நுட்பங்களும் பொருளுலகம் சார்ந்த, நுகர்வு சார்ந்த விசயங்கள்தான்.இதற்கு மாறாக வாழ்க்கையின் உண்மையைத் தேடுவது ஆன்மீகம். வாழ்க்கையின் உண்மையான, முழுமையான அர்த்தம் ஆன்மீகத்தில்தான் இருக்கிறதுஎன்று ஒரு சாரார் வாதிடுகிறார்களே…

**பதில்** : அறிவியலுக்கும் ஆன்மீகத்துக்குமான வேறுபாடு தெள்ளத் தெளிவானது. ஒருகாலத்தில் ராகு, கேது பற்றியும் அவற்றின் தாக்கங்கள் பற்றியும் ஆன்மீகவாதிகள் பேசிவந்தார்கள். இப்போது அதெல்லாம் இல்லை என்று நிரூபணமாகிவிட்டது. ஆன்மீகவாதிகளே இப்போது அதையெல்லாம் பேசுவதில்லை. பூமிக்கு நெருங்கி இருப்பது சூரியன்தான், சந்திரன் அதற்கு அப்பால் இருக்கிறது என்று சொல்லி வந்தார்கள். அதை ஆர்யபட்டா (Aryabhata) தன் காலத்திலேயே தள்ளுபடி செய்துவிட்டார் – நெருக்கத்தில் இருப்பது நிலவுதான், சூரியன் வெகுதொலைவில் தள்ளி இருக்கிறது என்று அவர் சொன்னார். சமுதாய வளர்ச்சியோடு இணைந்து அறிவியல் ஞானம் வளர்ந்துகொண்டே வருகிறது. மாற்றங்கள்தான் வளர்ச்சி என்கிறது அறிவியல் ஞானம். சமுதாய வளர்ச்சிக்கும் அடிப்படை மாற்றங்கள்தான். ஆனால் ஆன்மீக ஞானம் எதுவும் மாறாதது என்பதை அடிப்படையாகக் கொண்டது. புற மாற்றங்கள் இருந்தாலும், மனிதனுக்கு ஏதோவொரு மாறா அம்சம் இருக்கிறது. இயற்கையிலும் பிரபஞ்சத்திலும் அப்படியொரு மாறா அம்சம் இருக்கிறது என்று ஆன்மீகவாதிகள் சொல்கிறார்கள். ஆனால் ஆன்மீக வாதம் கூட காலத்திற்குக் காலம் மாறுபட்ட விளக்கங்களோடுதான் முன்வைக்கப்பட்டு வந்திருக்கிறது. இயற்கை என்ற அடிப்படை இல்லை என்றால் ஆன்மீகமே ஏது? மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தியால் உண்டாக்கப்பட்டது ஆன்மீகம் என்கிறார்கள். அந்த சக்திதான் கடவுள்என்றும் சொல்கிறார்கள். மதம் சார்ந்த கடவுளையும் சொல்கிறார்கள், மதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட சக்தி என்றும் சொல்கிறார்கள். ஆனால், மனிதர்களால் உண்டாக்கப்பட்டதுதான் ஆன்மீகம்.

**கேள்வி** : விதிவிலக்குகள் தவிர்த்துப் பொதுவாக ஆன்மீகம், கடவுள், மதம் என்று முன்வைக்கிறவர்கள் வலதுசாரிகளாக இருக்கிறார்கள். நவீன அறிவியல் வளர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொள்கிற கார்ப்பரேட்டுகளும் ஆன்மீகத்தின் பக்கம் நிற்கிறார்கள். அறிவியல் கண்ணோட்டத்திற்காக வாதிடுகிறவர்கள் இடதுசாரிகளாக இருக்கிறார்கள் அல்லது இடதுசாரிகளின் பக்கம் நிற்கிறார்கள். இந்த வேறுபாடு எப்படி ஏற்பட்டது?

**பதில்** : வாழ்க்கை பற்றிய அறிவியல் பூர்வப் புரிதலுக்கும் இடதுசாரி நிலைப்பாட்டிற்கும் இடையேயான இணைப்பு இயற்கையானது. இயற்கையின் மாற்றங்கள் பற்றிய தெளிவிலிருந்து, சமுதாய மாற்றங்கள் பற்றிய தெளிவும் ஏற்படுகிறது. அதற்கான தத்துவங்களும் இயக்கங்களும் உருவாகியிருக்கின்றன. கடவுள் நம்பிக்கையாகவும் மத நிறுவனமாகவும் உருவெடுத்த ஆன்மீகம் மாற்றங்களை ஏற்க மறுக்கிறது. இயற்கை மாறாதது, மனித சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வான படிநிலையும் மாறாதது என்ற தத்துவமும் அதற்கான இயக்கங்களும் ஆன்மீகத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. எதுவும் மாறாது என்ற கோட்பாடும் இந்தப் படிநிலை ஏற்பாடும் கார்ப்பரேட் அமைப்பு உள்ளிட்ட சுரண்டல் கட்டமைப்புகளுக்குச் சாதகமாக இருக்கின்றன. அவர்களுடைய வளமும் பலமும் ஆன்மீகவாதிகளுக்குச் சாதகமாக இருக்கின்றன. தொடக்கத்தில் முற்போக்கான மாற்றங்கள் நிகழ்ந்ததில் ஆன்மீகமும் பங்களித்திருக்கிறது. உதாரணமாக, அன்றைய சமூகப் பாகுபாடுகளுக்கும் கெடுபிடிகளுக்கும் மாற்றாகப் புறப்பட்ட புத்தம் அப்படிப் பங்களித்த ஒரு ஆன்மீக இயக்கம்தான். வைதீகத்திற்கு உள்ளேயே, மனிதரின் எலும்பிலும் தோலிலும் சாதி அடையாளம் இருக்கிறதா என்று கேட்ட சித்தர் குரல்கள் அப்படிப்பட்ட பங்களிப்புதான். முதலாளித்துவமே கூட, முந்தைய அடிமைச் சமுதாயத்திற்கும் நிலப்பிரபுத்துவச் சமுதாயத்திற்கும் மாற்றாக ஒரு புதிய சமுதாய அமைப்பை ஏற்படுத்தினாலும், அப்புறம் அதை அப்படியே பாதுகாக்க முயல்கிறது. அதற்கு ஆன்மீகத்தையும் பயன்படுத்துகிறது. முதலாளித்துவத்தின் மூலம் கிடைக்கிற நவீன தொழில்நுட்பங்களை ஆன்மீகவாதிகளும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்த அடிப்படையில்தான் முற்போக்கான

இலட்சியங்களுக்கும் அறிவியல் சிந்தனைகளுக்கும் இயல்பான ஒரு உறவு இருக்கிறது.

**கேள்வி** : உங்களுடைய ஒரு முக்கியமான பங்களிப்பு, இன்றைய சூழலில் இயக்கவியல் பொருள்முதல் வாதத்தை எப்படிப் புரிந்துகொள்வது என்ற விளக்கவுரை. அது பற்றிச் சொல்லுங்கள்…

**பதில்** : பொதுவாக இயற்பியல், வேதியல், உயிரியல் ஆகியவை உள்பட ஏராளமாக உள்ள வெவ்வேறு பிரிவுகளைப் பற்றித் தெரிந்துகொள்வது ஒரு பகுதி அறிவியல் செயல்பாடு. இவற்றுக்கு இடையே உள்ள ஒருங்கிணைப்பைப் புரிந்துகொள்வதும் முக்கியம், ஏனென்றால் இவற்றில் எந்தப்பிரிவும் தனித்து இயங்குவதில்லை. இப்படியான ஒருங்கிணைப்பு மனித சிந்தனைப் போக்கிலும் இருக்கிறது. அதைத் தெரிந்துகொள்வதுதான் தத்துவ ஞானம் என்பதன் அடிப்படை. சோக்ரட்டீஸ் சொன்னது போல, நாம் என்ன செய்கிறோமோ அதை ஏன் செய்கிறோம் என்ற அறிவு நமக்குத் தேவை. "ஆராயப்படாத வாழ்க்கை வாழத் தகுதியற்றது," என்றார் அவர். இதுவே தத்துவ ஞானத்தின் அடிப்படை. இதனுடைய வளர்ச்சிதான் இயக்கவியல் பொருள்முதல்வாதம். அதேவேளையில் இது இப்போதும் எதிர்காலத்திற்கான தத்துவமாகத்தான் இருக்கிறது. அதாவது, அதைச் சரியான முறையில் புரிந்துகொண்டு, ஆழப்படுத்திக்கொண்டு எடுத்துச் செல்கிற வளர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. உலகம் முழுவதுமே இதுதான் நிலைமை. சோவியத் யூனியனின் வெற்றியும் சோசலிச வளர்ச்சியும் இயக்கவியல் பொருள்முதல்வாதம் பற்றிய உலகளாவிய புரிதலுக்கு ஒரு தளம் அமைத்துக்கொடுத்தது.அங்கே ஏற்பட்ட வீழ்ச்சி, இதற்கும் ஒரு பின்னடைவானது. ஆயினும், உலகத்தின் இன்றைய நெருக்கடிகள், அதற்குக் காரணமாக உள்ள முதலாளித்துவத்தின் கடுமையான சிக்கல்கள், சமூக முரண்பாடுகள் இவற்றைப் புரிந்துகொள்ள முயல்கிறபோது மறுபடியும் இயக்கவியல் பொருள்முதல்வாதம் முன்னுக்கு வருகிறது. அதை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டுமானால், அதைப் பற்றி நன்றாகப் படிக்க வேண்டும், மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

**கேள்வி** : இந்தத் தெளிவுகளை ஏற்படுத்துவதில் அரசாங்க அமைப்புகள், அறிவியல் இயக்கங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு போதுமானதாக இருக்கிறது எனக் கருதுகிறீர்களா?

**பதில்** : அறிவியல் வளர்ச்சி என்பது அறிவியல் ஆராய்ச்சியாளர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும், சம்பந்தப்பட்டநிறுவனங்களும் மட்டுமே சார்ந்ததாக இருந்துவிடக்கூடாது. மக்கள் புதிய கண்டுபிடிப்புப் பொருள்களின் நுகர்வோராக மட்டும் இருந்துவிடக் கூடாது. அறிவியல் தகவல்களும் அறிவியல் கண்ணோட்டமும் மக்கள் இயக்கமாக வளர்ச்சியடைய வேண்டும்.இதில் அரசாங்க அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றின் பங்கு ஒரு வரம்புக்கு உட்பட்டதுதான். அந்த வரம்புக்கு உள்ளேயே, அறிவியல் பார்வையை மக்களிடையே பரப்புவதில் இந்த அமைப்புகள் எந்த அளவுக்குச் செயல்பட்டுள்ளன என்பது விவாதத்திற்கு உரியதுதான். அரசாங்கத்தின் கண்ணோட்டம் உள்ளிட்ட அரசியலும் இதில் இருக்கிறது. மக்கள் அறிவியல் இயக்கங்கள்தான் இதில் நிறையச் செய்ய வேண்டியிருக்கிறது.அதில் போதுமான அளவுக்கு முயற்சிகள் நடப்பதாக மனநிறைவு அடைவதற்கில்லை. இதில் இன்னொரு தடையும் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய முதலாளித்துவக் கட்டமைப்பில் அறிவியலும் அதற்கு உட்பட்டுதான் இயங்க வேண்டியிருக்கிறது. முதலாளிகள்தான் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கும் முதலீடு செய்கிறார்கள். அது அவர்களுடைய வணிகத்திற்காகவும் இலாபத்திற்காகவும்தான் என்பதை மறுப்பதற்கில்லை. அதற்காக, இன்றைய அறிவியலே முதலாளித்துவ அறிவியல்தான், அதை வளர்க்க வேண்டியதில்லை, ஒரு மாற்றுஅறிவியலை உருவாக்க வேண்டும், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதுதான் முக்கியம் என்று ஒரு பகுதியினர் வாதிடுகிறார்கள். மக்களுக்கான அறிவியல்தான் மாற்று அறிவியல்.அதிலே தங்களை ஈடுபடுத்திக்கொள்ள மறுக்கிறார்கள். இது மக்கள் அறிவியல் இயக்கத்தில் சில தேக்கங்களை ஏற்படுத்துகிறது என்பது என் கருத்து.

**கேள்வி** : இதையொட்டி இன்னொரு கேள்வி வருகிறது. மருத்துவம், விவசாயம் இவற்றில் நவீன அறிவியல் வளர்ச்சிகளை முற்றிலுமாக நிராகரிப்பது, முந்தையமுறைகளுக்கே திரும்பிச் செல்வது என்ற முயற்சிகளும், அவற்றைப் பரப்புகிற இயக்கங்களும் நடக்கின்றன. அவை எந்த அளவுக்கு ஏற்கத்தக்கவை?

**பதில்** : அறிவியலை வளர்க்க எல்லா வகையான அணுகுமுறைகளும் தேவை. இறுதியாக மனித சமுதாயத்திற்குப் பயன்படவேண்டும் என்பதே முக்கியம். தற்போதைய நிலையில், விவசாயம், மருத்துவம் உள்ளிட்ட நவீன அறிவியல் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்கிறவர்கள் பெருமளவுக்கு முதலாளிகள்தான்.அவர்களுடைய நோக்கம் இலாபம்தான். அந்தச் சந்தையிலிருந்து அறிவியலை மீட்க வேண்டுமேயல்லாமல், இதில் அரசின் பொறுப்பை அதிகரிக்க வலியுறுத்த வேண்டுமேயல்லாமல் இந்த அறிவியலே வேண்டாம் என்ற முடிவுக்குப் போய்விடக்கூடாது. மருத்துவத்தில், நோய்த் தடுப்பு மருந்து என்ற செயல்முறையே தவறு என்றும் சொல்கிறார்கள். அமெரிக்காவில் ஒரு மாவட்டத்தில் தடுப்பு மருந்து எடுத்துக்கொள்வதில்லை என்று முடிவு செய்தார்கள். அதன் விளைவு, முற்றாக ஒழிக்கப்பட்டிருந்த டிப்தீரியா (Diphtheria - தொண்டை அழற்சி) மறுபடியும் அங்கே குழந்தைகளைத் தாக்கத் தொடங்கியது. குழந்தைகளின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்துகிற நோய் இது. உலகம் முழுவதும் டிப்தீரியாவால் இலட்சக்கணக்கான குழந்தைகள் செத்துப்போய்க் கொண்டிருந்த நிலைமை தடுப்பு மருந்தால் முடிவுக்கு வந்திருந்த நிலையில் அங்கே இப்படியொரு நிகழ்ச்சிப்போக்கு ஏற்பட்டது. இதே போல் இந்தியாவிலும் சிலர் தடுப்பு மருந்தைக் கைவிட்டார்கள் – முதியவர்களுக்கே கூட டிப்தீரியா பாதிப்பு ஏற்பட்டது. இந்த வாதம் காந்தி காலத்திலேயே இருந்ததுதான். அவரும் இயற்கை உணவு, பாரம்பரிய மருத்துவம் என்று வலியுறுத்தியவர்தான், தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவும் செய்தார். ஆனால், அவருக்குக் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டபோது மருத்துவர்கள் ஆலோசனைப்படி நவீன மருத்துவமனையில்தான் சேர்க்கப்பட்டார். ஆகவே, நவீன வளர்ச்சிகளை முற்றிலுமாகக் கைவிடுவது அபாயகரமானது.

அதேவேளையில், விவசாயமானாலும் மருத்துவமானாலும் பயனுள்ள பாரம்பரிய முறைகள்காலத்தின் தேவைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப ஊக்குவிக்கப் பட வேண்டும். ஒட்டுமொத்த அறிவியல் வளர்ச்சிக்குப் பங்காற்றுகிற எந்த வழிமுறையும் வளர்க்கப்பட வேண்டும். அதற்கான குரல்கள் ஒலிக்க வேண்டும்.

**கேள்வி** : நீங்கள் சொல்கிற மக்கள் அறிவியல் என்ற இலட்சியத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பது எது?அரசாங்க அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளில் மதச்சடங்குகள் பின்பற்றப்படுகின்றன. ஆட்சியில் இருப்பவர்களே அறிவியலுக்குப் புறம்பாகப் பேசுகிறார்கள். இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சிகள் எல்லாம் வேத காலத்திலேயே இருந்தவைதான் என்று அவர்களும் அவர்களைச் சார்ந்த பல அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் சொல்கிறார்கள்.

**பதில்** : அடிப்படையான காரணம் சமூக மாற்றம் ஏற்படுத்தப் படவில்லை என்பதுதான். குறிப்பாகக் கிராமங்களில், நிலவுடைமை சார்ந்த, வர்க்கம், சாதி அடிப்படையிலான ஆதிக்கத்தை அடிவேரோடு எடுத்துவிட்டு, மாற்றங்களை ஏற்படுத்தத் தவறியது இந்திய முதலாளித்துவம்.இது ஒரு மிகப்பெரிய முட்டுக்கட்டை. இப்போதும் கூட, கிராம வளர்ச்சிகள் பற்றிப் பேசுகிற யாரும், அறிவு வளர்ச்சி, அறிவியல் ஞானம் ஆகியவை பற்றிப் பேசுவதில்லை.பொருள் நுகர்வு என்ற அடிப்படையில், கிராம மக்களுக்கு நவீன தொலைக்காட்சிப் பெட்டி போனது. ஆனால் அதன்வழியாக அவர்களிடம் போனதென்னவோ மூடநம்பிக்கைகளையும் வறட்டுக் கவுரவங்களையும் வலுப்படுத்துகிற கதைகள்தானே! வாட்ஸ்அப் (Whats App) வழியாகத் தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன என்கிறார்கள், வாட்ஸ்அப் வருவதற்கு முன் தொலைக்காட்சித் தொடர்கள் அதைத் தானே செய்தன! நாடு விடுதலை பெற்ற தொடக்க ஆண்டுகளில், தொழில் வளர்ச்சிக்கு மற்ற வளர்ந்த நாடுகள் உதவிசெய்யத் தயாராக இல்லாத சூழலில், பொதுத்துறையிலும் அறிவியல் தொழில்நுட்பத்திலும் குறிப்பிடத்தக்க அளவுக்குநேரு அரசு முதலீடு செய்தது உண்மை. அது இத்துறைகளில் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு உதவியது. ஆனால்,இப்படி முதலாளித்துவ நலன் சார்ந்த தொழில்துறை வளர்ச்சிகளில் காட்டப்பட்ட அக்கறை, அரசமைப்பு சாசனத்திலேயே சொல்லப்பட்டிருக்கிற அறிவியல் மனப்பான்மையை சமுதாயத்தில் வளர்ப்பதில் காட்டப்படவில்லை. அறிவியல் மனப்பான்மை வளர்வதற்கேற்ற சமூக மாற்றங்கள் செய்யப்படவில்லை.மிகச் சிறப்பான அறிவியல் வல்லுநர்கள் நம் நாட்டில் அன்றும் இருந்தார்கள், இப்போதும் இருக்கிறார்கள்.குறிப்பாக விண்வெளி உள்ளிட்ட துறைகளில் சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. அதே அளவுக்கு மக்களிடையே அறிவியல் வளர்ச்சி என்பது நவீனப் பொருள்களின் பயன்பாடு என்ற அளவிலேயே விடப்பட்டுவிட்டது. வேதகாலத்தில் விமானம் இருந்தது, ஸ்டெம் செல் சிகிச்சை இருந்தது என்று சொல்கிறவர்களுடைய நோக்கம் நவீன அறிவியலைத் தாக்குவது அல்ல. அவர்களுடைய சித்தாந்தப்படி பிற்போக்கான அரசியல், சமூகச் சிந்தனைகளைப் பாதுகாக்க இப்படிப்பட்ட பகுத்தறிவுக்குப் பொருந்தாத செய்திகளைச் சொல்கிறார்கள். நேரடியாகச் செய்ய முடியாது என்பதால், சுற்றி வளைத்து அறிவியலுக்குப் புறம்பான சிந்தனைகளைப் புகுத்துகிறார்கள். உதாரணமாக, சாதி இருக்க வேண்டும் என்று சொல்லமாட்டார்கள். ஆனால், சாதிய அரசியலைப் பாதுகாப்பார்கள். மதவெறி சரிதான் என்று சொல்ல மாட்டார்கள், ஆனால் மதவாத அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்துகிற வேலைகளைக் கூசாமல் செய்வார்கள். பிற்போக்குக் கருத்துகளை வளர்ப்பதற்காக, இன்றைய அறிவியலில் என்ன இருக்கிறது என்று கூடப் பேசுவார்கள்.

**கேள்வி** : புவி வெப்ப நிலை பேச்சுவார்த்தைக் குழுவில் இந்தியாவின் சார்பில் நீங்களும் இடம்பெற்றிருக்கிறீர்கள்.அந்தப் பேச்சுவார்த்தை என்ன அளவில் இருக்கிறது?

**பதில்** : இன்று உலகத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கிற இயற்கைச் சமநிலை சார்ந்ததொரு பிரச்சனை புவிவெப்பம்.அதைக் கட்டுப்படுத்துவதில், அதன் பாதிப்புகளைக் குறைப்பதில் முக்கியமான பொறுப்பு வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இருக்கிறது. ஆனால் அந்த நாடுகளின் அரசுகள் இந்தப் பொறுப்பை ஏற்க மறுக்கின்றன.மாறாக, வளரும் நாடுகள் மேல் சுமையை ஏற்ற முயல்கின்றன. பேச்சுவார்த்தை முன்னேற்றத்திற்கு இது மிகப்பெரிய தடையாக இருக்கிறது. உலக மக்கள் அனைவரையும் பாகுபாடின்றிப் பாதிக்கக்கூடியது புவிவெப்பம். இதற்கு அறிவியல் அணுகுமுறை, சரியான விகிதத்தில் பொறுப்பைப் பகிர்வது என்ற இரண்டு வழிகள்தான் இருக்கின்றன.வளர்ந்த நாடுகள் இந்த வழிகளை அடைத்துக்கொண்டிருப்பது முக்கியமான பிரச்சனை. இன்னொருபுறம் டிரம்ப் போன்ற சக்திகளின் எதிர்மறை அணுகுமுறைகளையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. உலக நாடுகள் இதை எப்படிக் கையாளப் போகின்றனஎன்பது முக்கியத்துவம் வாய்ந்த கேள்வி. நோம் சாம்ஸ்கி (Noam Chomsky) சொன்னதை அனைவரும் நினைவில் கொண்டாக வேண்டும். உலகில் இன்று இரண்டு பேரழிவு அபாயங்கள் இருக்கின்றன. ஒன்று, அணு ஆயுதங்கள், இரண்டு, புவி வெப்பம் என்றார் அவர்.

நன்றி : தீக்கதிர்

# மனித உரிமைப் பேரவையில் சீனா இலங்கைக்கு உறுதியான ஆதரவு!

*ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 40 ஆவது கூட்டத்தொடரில் சீனா தனது உறுதியான ஆதரவை இலங்கைக்கு வழங்கியது.*

*மனித உரிமைப் பேரவையில் உரையாற்றிய சீனத் தூதுக்குழு, இலங்கையில் பொருளாதாரத்தை விருத்தி செய்யவும், வறுமையை ஒழிக்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டியது.*

*அத்துடன் மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் அந்த நாடு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளதாகவும் சீனக் குழு சுட்டிக்காட்டியது.*

*எனவே இந்த நிலைமையில், இலங்கையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றகரமான நிலைமையை சர்வதேச சமூகம் பக்கச்சார்பின்றி மதிப்பிடுவதுடன், அதைப் பாராட்டவும் வேண்டும் எனவும் சீனப் பிரதிநிதித்துவக் குழு வலியுறுத்தியது.*

*ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றுவதற்கான சிறிலங்கா தொடர்பான தீர்மானத்தின் வரைவை, கனடா, ஜேர்மனி, பிரித்தானியா, அயர்லாந்து, மொன்ரெனிக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இணைந்து முன்வைத்திருந்தன.*

# அர்ஜுனா மகேந்திரனின் பிரச்சினையில் தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

இலங்கையின் வரலாற்றில் சுதந்திரத்துக்கு முன்பும் பின்பும் ஒருபோதும் நடைபெறாத அளவுக்கு பாரிய நிதி மோசடி இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்றிருக்கிறது. இந்த மோசடியில் இலங்கை பல்லாயிரம் கோடி ரூபாவை இழந்திருக்கிறது. இந்த மோசடியைச் செய்தவர் இன்றைய இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவான முன்னாள் இலங்கை வங்கி ஆளுநர் அர்ஜுனா மகேந்திரன்.

2015 ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டு வெற்றியீட்டினார். மைத்திரி வென்றவுடனேயே ஜனநாயக சம்பிரதாயங்களை மீறி அன்று பதவியில் அறுதிப் பெரும்பான்மையுடன் இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை பதவி நீக்கம் செய்துவிட்டு, வெறுமனே 47 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 'நல்லாட்சி' என்ற பெயரில் அரசாங்கமொன்றை நிறுவுவதற்கு வழிவகுத்தார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் பதவியில் இருந்த ரணில் தலைமையிலான சிறுபான்மை அரசாங்கத்தை நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்ச தலைமையில் ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரி வழிவகுத்த போது, "ஐயோ ஜனநாயகம் கொலை செய்யப்பட்டுவிட்டது" எனக் கூக்குரல் இட்டு அட்டகாசம் புரிந்த அரசியல் கட்சிகளும், மனித உரிமை அமைப்புகளும், மேற்கு நாடுகளும் 2015 ஜனவரியில் ஜனநாயகப் படுகொலை நிகழ்ந்த போது மூச்சும் காட்டவில்லை.

ரணில் 2015இல் ஜனநாயக விரோதமாக பிரதமராக நியமிக்கப்பட்டதும் முதல் செய்த வேலை தனது சகபாடியான அர்ஜுனா மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கும்படி ஜனாதிபதி மைத்திரியிடம் சிபார்சு செய்ததுதான். ஜனாதிபதியும் அதைச் செய்தார்.

மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநராக இருந்த ஒன்றரை வருட காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் அவரது அமைச்சரவைச் சகபாடிகள் சிலரினதும் உதவியுடன் மத்திய வங்கியில் பிணைமுறி என்ற பெயரில் மிகப்பெரிய ஊழல் மோசடி ஒன்றை நடத்தி




பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா பணத்தை சூறையாடிச் சுருட்டிக் கொண்டு பிரஜாவுரிமை பெற்றுள்ள சிங்கப்பூர் சென்று அங்கு பகிரங்கமாகவே வாழ்கிறார்.

மகேந்திரன் மத்திய வங்கியில் மோசடியில் ஈடுபட்டதும், அதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்பு இருப்பதும் ஜனாதிபதி அமைத்த விசாரணைக் குழுவின் மூலம் பட்டவர்த்தனமாகத் தெளிவாக்கப்பட்டுள்ளது.

***புனிதன்***

இதைத் தொடர்ந்து அர்ஜுனா மகேந்திரனை விசாரணைக்காக இலங்கை திரும்புமாறு அறிவித்தும் அவர் அதைச் சட்டை செய்யவில்லை. மகேந்திரனைக் கைது செய்வதற்கு இலங்கை நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பித்தும் அவர் அதற்கும் அவர் தலை வணங்கவில்லை. அவரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கெள்ளும்படி ஜனாதிபதி மைத்திரியும் எதிர்க்கட்சிகளும் பல தடவைகள் கோரியும் ரணில் அரசாங்கம் எவ்வித முயற்சிகளும் எடுக்காமல் காலத்தை இழுத்தடித்து வருகின்றனர். 'இன்டர்போல்' எனும் சர்வதேச பொலிஸ் நிறுவனம் மகேந்திரனை சிவப்புப் பட்டியலில் போட்டு கைது பிடியாணை விடுத்தும் மகேந்திரன் அதற்கும் மசியாமல் இருக்கின்றார்.

ஜனாதிபதி மைத்திரி சில மாதங்களுக்கு முன்னர் சிங்கப்பூர் சென்றிருந்த சமயம் மகேந்திரனை நாடு கடத்தி உதவும்படி நேரடியாக சிங்கப்பூர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தும் அந்த நாட்டு அரசாங்கம் உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக அதிருப்தி அடைந்த ஜனாதிபதி பகிரங்கமாக சிங்கப்பூர் மீது குற்றஞ்சாட்டிய பின்னர்தான் அந்நாட்டு அரசாங்கம் சில சட்டப் பிரச்சினைகளைச் சொல்லி தனது இழுத்தடிப்பை நியாயப்படுத்த முயல்கிறது. ஆனால் சிங்கப்பூர் சொல்லும் நொண்டிச்சாட்டுகள் பொய்யானவை என இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மகேந்திரனின் நெருங்கிய சகாவும், அவரை மத்திய வங்கி ஆளுநராக நியமிப்பதற்கு சிபார்சு செய்தவருமான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மகேந்திரன் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அக்கறையற்று அவரைப் பாதுகாக்க முயல்வதைப் பார்க்கும் போது, மகேந்திரன் குற்றமிழைத்துள்ளார் என்பதும், அதில் ரணில் அரசாங்கத்துக்கும் பங்கு இருப்பதும் புலனாகின்றது.

இது ஒருபுறமிருக்க, இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு தமிழரான மகேந்திரன் செய்துள்ள மிகப்பெரிய மோசடி முழு இலங்கைத் தமிழர்களுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ள நிலையில், தமிழனின் வீரம், தியாகம், மானம், மரியாதை என பலவற்றை வானம் பிளக்க கூக்குரல் இட்டு வரும் எந்தவொரு தமிழ் அரசியல் தலைமையும் மகேந்திரன் செய்த தேசத்துரோக நடவடிக்கை குறித்து இதுவரை வாயே திறக்காமல் இருந்து வருகின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, முற்போக்கு தமிழ் கூட்டணி உட்பட அனைத்து தமிழ் தேசியவாத கட்சிகளும், இயக்கங்களும் இந்த விடயத்தில் மயான அமைதி காத்து வருகின்றன. 'மகேந்திரன் தமிழன்தானே? அவர் சிங்களவனின் இலங்கையைக் கொள்ளை அடித்தால் நமக்கென்ன?' என அவை கருதுகின்றனவோ என்னவோ?

இந்த விடயத்தில் மட்டுமல்ல, அண்மையில் மலையக தோட்டத் தொழிலாளர்கள் 1000 ரூபா சம்பளம் வழங்கக் கோரி பெரும் போராட்டத்தில் ஈடுபட்ட போதும் இந்த தமிழ் தலைமைகள் ஒரு ஆதரவு வார்த்தை தன்னும் கூறாது வாயை இறுக மூடிக்கொண்டு இருந்தன.

இவர்களின் இந்த நிலைப்பாட்டுக்கு அடிப்படைக் காரணம் ஆட்சியில் இருக்கும் தமது வர்க்க சகாவான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு இடையூறு செய்யக்கூடாது என்பதைத் தவிர வேறு எதுவும் காரணமாயிருக்க முடியாது.

# வரவு செலவுத்திட்டம் சம்பந்தமாக டியு குணசேகர தெரிவித்துள்ள கருத்து

"பெரும்பாலான அரசியல்வாதிகள் இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி குறித்து எதுவும் அறியாமல் இருக்கிறார்கள். இந்த நிலையில் நிதியமைச்சர் மங்கள சமரவீர உண்மையான நிலைமையை வெளிப்படுத்தாமல் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்"

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளரும், பொருளாதார விவகாரங்களில் விற்பன்னருமான டியூ குணசேகர. கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:

"சுதந்திரத்துக்கு பின்னரான காலத்தில் இலங்கை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்குகிறது. தற்பொழுது எங்களால் முன்நோக்கி நகர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாடு கடன் பொறியில் சிக்கியுள்ள நிலையில் அரசாங்கம் செயல்படுவது என்பது சாத்தியமற்றது. இந்த விடயம் வரவு செலவுத் திட்டத்தில் ஆதாரபூர்வமாக உள்ளது.

அரசாங்க வருவாயை கட்டாயமாக ஒரு குறிப்பிட்ட அளவு அதிகரிக்க வேண்டும் என உலக வங்கி அரசாங்கத்திடம் கூறியுள்ளது. இருந்தபோதிலும், அரசாங்கம் அதைச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. வருவாயை அதிகரிக்க அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லாத அதே வேளையில், மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக செலவீனம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிவாரணமும் தற்காலிகமானதே.

அரசாங்கம், வெளிநாட்டு கையிருப்பு இல்லாத நிலையில், கடன்கள் மூலம் நிதியைப் பெற முயல்கிறது.

எமது ஏற்றுமதிகளை அதிகரிக்காததால் எமது கையிருப்பில் நிதி இல்லை. எமது இறக்குமதி செலவினத்தில் 50 சத வீதமே எமது ஏற்றுமதியால் கிடைக்கும் வருமானமாகும். இதனால் எமது ரூபாயின் மதிப்பு குறைவடைந்துள்ளது. எம்மால் நேரடி வெளிநாட்டு முதலீடுகளையும் பெற முடியவில்லை.

இதனால் முன்னர் பெற்ற கடன்களைச் செலுத்துவதற்கு மேலும் மேலதிக கடன்களைப் பெறும் நிலையில் உள்ளோம்.

நிதியமைச்சர் தமது வரவு செலவுத்திட்ட உரையின் போது உலகப் பொருளாதார நிலைமை குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. அதுமட்டுமல்ல, அவர் தனது உரையின் போது உள்நாட்டு பொருளாதார நிலைபற்றிக்கூட சரியாகக் குறிப்பிடவில்லை. இந்த அரசாங்கத்தின் இறுதி வரவு செலவுத்திட்டம் இதுவாகும். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் நமது பொருளாதாரத்துக்கு ஏராளமான அழிவுகளைச் செய்துள்ளார்கள். கடந்த நான்கு வருடங்களாக எமது உள்நாட்டு தேசிய பொருளாதார வளர்ச்சி சுமார் 3 சதவீதமாகவே இருந்து வந்துள்ளது. 1987 – 89 காலகட்டத்துக்குப் பின்னர் நிலைமை இவ்வளவு மோசமாக இருந்ததில்லை"

இவ்வாறு டியு குணசேகர தமது உரையின் பேது குறிப்பிட்டார்.

# மாகாண சபை முறைமைக்கே இந்தியா ஆதரவு!

**இ**லங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும்படியும், அதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்க முடியும் என்றும் இந்தியா இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் ஜெனீவா கூட்டத் தொடரில் பேசும் போதே ஜெனீவாவில் உள்ள இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி ராஜீவ் கே.சந்தர் இவ்வாறு இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளார். மேலும் அங்கு உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி கூறுகையில், இலங்கையின் பல்தேசிய, பல்மொழி, பல்சமய நிலைப்பாட்டை பேணுவதற்கு இந்தியா எப்பொழுதுமே தனது ஆதரவை வழங்கி வருகிறது என்று கூறினார்.

ஜெனீவாவில் முன்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இலங்கையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்தியப் பிரதிநிதி தனது பேச்சின் போது குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதிநிதி 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்குமாறு வலியுறுத்தியதின் மூலம், இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் நிலைப்பாடு என்னவென்பதை அது வெளிப்படுத்தியுள்ளதாகவே நம்பப்படுகிறது.

அதாவது, 'வானவில்'லின் கடந்த இதழ் (98) முன்பக்க தலைப்புக் கட்டுரையில் நாம் வலியுறுத்தியது போல, ஐ.தே.க. அரசாங்கமும், அதன் சகபாடியான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட மாகாண சபை முறையை இல்லாமல் செய்ய எடுத்து வரும் சூழ்ச்சித்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# வட மாகாண சபையால் பயன் பெற்ற அரசியல்வாதிகளும் வெறுங்கையுடன் நிற்கும் பொதுமக்களும்!

**மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட வடக்கு மாகாணசபை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னிறுத்திய சி.வி.விக்னேஸ்வரனை முதலமைச்சராகக் கொண்டு தனது ஆயுள்காலம் முழுவதையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளது.**

**இந்தக் காலகட்டத்தில் மாகாணசபை 400 இற்கு மேற்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி, மற்றெந்த மாகாண சபைகளையும் விட சாதனையும் படைத்துள்ளது. (ஊழல் புரிவதிலும் சாதனை படைத்துள்ளது) இந்தத் தீர்மானங்களால் வடக்கிலுள்ள மக்களின் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை.**

**தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டது இனப் படுகொலை என்றும், போர்க்குற்ற விசாரணைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை அவசியம் என்றும் வடமாகாண சபையில் இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தன. ஆனால் அத்தீர்மானங்கள் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என கொழும்பில் உள்ள மூத்த ஊடகவியலாளர் அ.நிக்சன் என்பவர் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.**

**அதேநேரத்தில் இந்த மாகாணசபையால் யாரும் பயன் பெறவில்லை என்று கூறிவிடவும் முடியாது. அவர்கள் யார் என்பதை கீழே உள்ள விபரங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.**

*- வானவில்*

## *வட மாகாண சபை உறுப்பினர்களுக்கு மட்டும் மாதமொன்றுக்கு வழங்கிய கொடுப்பனவு!*

வடக்கு மாகாண சபையின் முதலாவது ஆட்சிக் காலத்தில் அவைத் தலைவர், பிரதி அவைத் தலைவர், எதிர்கட்சி தலைவர் ஆகியோருக்காக மாதமொன்றிற்கு சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் அடங்கலாக சுமார் 34 இலட்சத்து 898 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




தகவலறியும் உரிமைச் சட்டத்தினூடாக வடக்கு மாகாண பேரவை செயலகத்திடமிருந்து இது குறித்த தகவலை வழங்கியுள்ளது. எனினும் முதலமைச்சர் உள்ளடங்கலாக அமைச்சர் வாரியத்தில் அங்கம் வகித்த 5 உறுப்பினர்களின் சம்பள விபரங்களை வெளியிட மாகாண பேரவைச் செயலகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் அமைச்சுக்கள் ஊடாகவே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் ஊடாக தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வடக்கு மாகாண அவைத் தலைவருக்கான சம்பள கொடுப்பனவாக 63 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்பட்டது.

அவைத் தலைவருக்கான உபசரணை கொடுப்பனவாக 2 ஆயிரம் ரூபாயும், எரிபொருள் கொடுப்பனவாக 10 ஆயிரத்து 1 ரூபாவும், வாடகைப் பணமாக 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அவைத் தலைவருக்கு மாதமொன்றிற்கு ஒரு இலட்சத்து 501 ரூபாய் செலவு செய்யப்படுகின்றது.

வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவரின் மாதச் சம்பளமாக 31 ஆயிரத்து 750 ரூபாவும், உபசரனை படியாக ஆயிரம் ரூபாவும் எரிபொருள் படியாக 4 ஆயிரத்து ஒரு ரூபாவும் வழங்கப்பட்டது.


அதேபோன்று எதிர்க்கட்சி தலைவரது மாதச் சம்பளமாக 31 ஆயிரத்து 750 ரூபாயும், உபசரணை படியாக ஆயிரம் ரூபாயும், வாகனப் படியாக 40 ஆயிரம் ரூபாயும் எரிபொருள் படியாக 3 ஆயிரத்து ஒரு ரூபாயும் செலவு செய்யப்பட்டது.

உறுப்பினர்களது மாதச் சம்பளமாக 27 ஆயிரத்து 145 ரூபாயும், அவர்களது உபசரணைக்காக 500 ரூபாவும், வாகனப் படியாக 18 ஆயிரம் ரூபாயும், தொலைப்பேசி படியாக 25 ஆயிரம் ரூபாயும், அலுவலகபடியாக 50 ஆயிரம் ரூபாயும், எரிபொருள்படியாக 10 ஆயிரம் ரூபாயும், சாரதிப்படியாக 3 ஆயிரத்து 750 ரூபாயும், குழு கூட்டப்படி ஒன்றுக்கானது ஆயிரத்து 250 ரூபாயும், காகிதப்படி ஆயிரத்து 250 ரூபாயுமாக செலவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு மாகாண சபையின் அமர்வொன்றிக்கு 38 உறுப்பினர்களுக்குமாக 47 ஆயிரத்து 500 ரூபாயும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த 16 உறுப்பினர்களின் பிரயாணப் படியாக ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாய் வீதம் 48 ஆயிரம் ரூபாயும், வன்னித் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த 14 உறுப்பினர்களின் பிரயாணப்படியாக ஒருவருக்கு 7 ஆயிரம் ரூபாய் வீதம் 98 ஆயிரம் ரூபாயும் செலவளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் நால்வரது சம்பளக் கொடுப்பனவு, சபை அமர்வுக்கு வருகைக்கான கொடுப்பனவு என்பன தொடர்பாகவும் தகவலறியும் உரிமைச் சட்டத்தினூடாக மாகாண பேரவைச் செயலகத்திடம் கோரப்பட்டது.

எனினும் முதலமைச்சர், அமைச்சர்களது தகவல்களினை வழங்குவதற்கு வடக்கு மாகாண பேரவைச் செயலகம் மறுப்பு தெரிவித்துள்ளது.




## 60 ஆண்டுகளுக்கு முன் புவியியல் பேராசிரியரின் எச்சரிக்கை: கிணற்று நீர் உப்பு நீர் ஆகலாம்! வடபகுதி மக்கள் விழிப்பாயிருத்தல் அவசியம்!!

"இலங்கையின் வடபகுதி மேட்டு நிலமாயில்லாது கடல் மட்டத்திலிருப்பதனால் மிகச் சொற்ப நீரே தேக்கத்தில் இடம் பெறும். இந்தச் சுத்தமான மழை நீர்த் தேக்கப்படையின் கீழ் கடலிலிருந்து உட்சென்ற உப்புநீர் காணப்படுவது இயல்பேயாகும். ஆதலின் நாம் பூமியின் மேல் தளத்தின் கீழுள்ள நல்ல நீரைப் பயன்படுத்துவதில் விழிப்பாயிருத்தல் வேண்டும். நாம் தொடர்ச்சியாக கிணற்று நீரை இறைப்பதனால் அதன் கீழுள்ள உப்புநீரை மேலே வரவழைப்பதற்கு வழி திறந்தவர்களாவோம். எனவே, குறுகிய மழைக்காலத்தில் மழை நீரை இயன்றளவு கட்டுப்படுத்தி கீழ் ஊற்றுகள் நிரம்பி அவற்றின் மட்டம் உயரச் செய்வது மக்கள் கடனாம். நன்னீர்ப்படை தடிப்பாயிருந்தால் அது அதன் கீழுள்ள உப்பு நீர்ப்படையை அமுக்கி உப்பு நீர் மேல் வராது தடுத்துவிடும்." இவ்வாறு இலங்கைப் பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவராகப் பணியாற்றி வரும் பேராசிரியர் கே.குலரத்தினம் தாம் எழுதிய "யாழ்ப்பாண நில அமைப்பும் நீர் ஊற்றும்" என்ற கட்டுரையில் கூறிகின்றார். இக்கட்டுரை இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் "இளங்கதிர்" என்ற வருடாந்த வெளியீட்டில் பிரசுரமாகியுள்ளது.

### எம் முன்னோரின் உபாயம்

அவர் மேலும் கூறுவதாவது:

எங்கள் முன்னோர் இவ்வுண்மையை அறிந்தமையால் அவர்கள் வரட்சியான காலத்தில் குளங்களின் அடித்தளத்தில் சேர்ந்திருந்த வண்டல் மண்ணை அள்ளிக் கட்டுகளுக்குப் போடுவது வழக்கமாயிருந்து வந்தது. வண்டல் குளத்து நீரை உட்செல்ல விடாது தடுத்துவிடும். வண்டல் படிந்த குளத்தில் மழை நீர் உட்செல்ல இடமில்லை. இவ்வாறு அகற்றப்படும் வண்டல் மண் வயலுக்குச் செழிப்பளிக்கும் பசளையாயிருப்பதனால் இன்னொரு அனுகூலமும் ஏற்பட ஏதுவாகின்றது.

### தீவுப்பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு

இன்னும் தீவுப்பகுதிகளில் ஆழத்திலுள்ள உப்புநீர்ப்படை மிக மேலே இருப்பதனால் நன்னீர் குறுகிய காலத்தில் முடிவானதும் உப்பு நீரே கிணறுகளில் பெறக்கூடியதாக இருக்கின்றது. அவ்விடங்களில் வண்டல்கள் மிகக் கவனமாக அகற்றப்படுவதனால் கீழூற்றுகள் நிரம்பும்.

### வற்றாத கிணறுகளிலும் உப்பு நீர்

புத்தூர் நிலாவரை போன்ற வற்றாத கிணறுகளின் அமைப்பை விளக்கியெழுதும் போது பேராசிரியர் "அவற்றின் வற்றாத இயல்பைக் கண்டு மக்கள் அக்கிணறுகளை அடியற்றளவாகக் கருதுகின்றனர். உண்மையில் அவை அவ்வாறு வற்றாத தன்மையுடையனவல்ல. ஒருமுறை நன்னீர் முற்றாக வெளியேற்றப்படுமாயின் அதன் பின் உப்புநீர் மேல் வருவதைக் காண முடியும்" எனக் குறிப்பிடுகின்றார்.

### பேராசிரியரின் குறிப்புரை

பேராசிரியர் அ.குலரத்தினம் அவர்களின் கூற்றைக் குறித்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புவியியல் ஆசிரியராகப் பணியாற்றி வரும் திரு.வ.மகாதேவன் நமது நிருபரிடம் கூறியதாவது: இயந்திரக் குழாய்கள் மூலம் ஏராளமான நீர் இறைக்கப்பட்டு விவசாயம் செய்யப்பட்டு வரும் இக்காலத்தில் யாழ்ப்பாணக் கிணறுகளில் உள்ள நல்ல நீர் உப்பு

நீராக மாறக்கூடிய ஆபத்தான நிலையை பேராசிரியர் குலரத்தினம் முதன்முதலாக எழுத்து மூலம் வெளியிட்டதற்கு யாழ்ப்பாண மக்கள் என்றும் அவருக்கு கடமைப்பட்டவர் ஆகின்றனர். இந்த ஆபத்தைக் குறைப்பதற்கு ஒருவழி குளங்களிலுள்ள வண்டல் படிவுகளை வருடத்து வருடம் வரட்சி காலத்தில் அகற்றி வருதலேயாகும். இன்னொரு வழி குறைவான நீருடன் விளையக்கூடிய பயிர்களை யாழ்ப்பாண விவசாயிகள் தெரிந்து பயிரிடுவதற்கு வகை செய்வதேயாகும். உதாரணமாக யாழ்ப்பாண விவசாயிகள் புகையிலைக்குப் பதிலாக 'சிகரெட்' புகையிலையைப் பயிரிடுமாறு செய்தல் வேண்டும். இக்கருத்தை யாழ்ப்பாணக்குடா நாட்டின் மண்வகை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் விவசாயப்பகுதி ஆராய்ச்சியாளர் ஒருவர் சில மாதங்களுக்கு முன் வட இலங்கை புவியியல் சங்க கூட்டத்தில் வெளியிட்டார் என்றும், அவரும் கிணற்றுநீர் உப்பு நீராகக் கூடிய ஆபத்தையும் எடுத்து விளக்கியிருந்தார் என்றும் கூற விரும்புகின்றேன். அச்சுவேலி போன்ற சில இடங்களில் உள்ள சில கிணறுகளில் நீர் உவர் நீராக மாற்றமடைவதற்குக் காரணம் கடலேரித் திட்டமா என்பது ஆராய்ந்து முடிவு செய்யப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

மேலும் யாழ்ப்பாண மக்கள் இரு பாதுகாப்பு முறைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்பது அவர் தம் கருத்து.

1. குளங்களில் படியும் வண்டல் மண்ணை ஒவ்வொரு வருடமும் வரட்சிக்காலத்தில் தவறாமல் அகற்றிக் கொண்டு வர வேண்டும்.

2. குறைவான அளவு நீருடன் விளையக்கூடிய பயிர்களைத் தெரிந்து விவசாயிகள் பயிரிட ஆரம்பிக்க வேண்டும். இதற்கு தீவிர பிரச்சார இயக்கம் தேவை.

**கிராமங்களில் இயக்கங்கள்**

ஒவ்வொரு கிராமத்திலும் நன்னீர்ப்பாதுகாப்பு இயக்கங்களை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு பட்டின சங்கங்கள், கிராமச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் முதலியன உதவி புரிந்து வழிகாட்ட வேண்டும். அரசாங்கத்தை நம்பி மோசம் போகாமல் பொதுமக்களே முன்வந்து ஆவன செய்ய வேண்டும். பேராசிரியர் குலரத்தினம் விடுத்துள்ள இந்த எச்சரிக்கையை உதாசீனம் செய்தால் யாழ்ப்பாண மக்களின் உயிர்நாடியாகிய விவசாயத்துக்குப் பேராபத்து விளைந்தே தீரும். பின்பு கவலைப்படாமல் இருக்க வேண்டுமானால் முன்பு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமல்லவா?

**'வானவில்' குறிப்பு:** இக்கட்டுரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையின் *1959* மே *30*ஆம் திகதிய பதிப்பிலிருந்து எடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் யாழ்ப்பாண நிலத்தடி நன்னீர் தவறாகப் பயன்படுத்தப்பட்டால் எதிர்காலத்தில் விசாயத்துக்கு நீர் இல்லாமல் போகும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ஆனால் இன்றோ, யாழ்ப்பாணத்தில் குடி தண்ணீருக்கே தட்டுப்பாடு வந்துவிட்டது.

# அதிகாரிகளின் அசமந்தத்தால் இரணைமடு குள தண்ணீர் வீணாகின்றது!

**இ**ரணைமடு குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய 2,178 மில்லியன் ரூபா நிதியுடன் 2015 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் புனரமைப்பின் மூலமாக 34 அடியாக இருந்த குளத்தின் அணைக்கட்டு 36 அடிகளாக உயர்த்தப்பட்டது. புனரமைப்புச் செய்யப்பட்ட குளத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018 டிசம்பரில் திறந்து வைத்தார்.

ஆனால் இந்த புனரமைப்பு நடவடிக்கையின் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசமந்தமாக இருந்திருக்கிறார்கள், நிதி செலவழித்ததில் ஊழல் மோசடிகள் நடைபெற்றிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் தற்பொழுது எழுந்திருக்கின்றன. ஏனெனில், உருத்திரபுரம், முரசுமோட்டை, ஊரியான் மற்றும் வட்டக்கச்சி போன்ற இடங்களுக்கு நீர்பாயும் வாய்க்கால்களில் குறைபாடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இரண்டு நாட்களுக்கு ஒருமுறை இரணைமடு குளத்திலிருந்து வீணே வெளியேறும் நீரால் கிளிநொச்சி குளம் நிரம்பி வழிகின்றது.

இதுபற்றி மாவட்டத்தின் பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் என்.சுதாகரனைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது அவர் விடயத்தைத் தட்டிக்கழித்து, இரணைமடு குள நீர்ப்பாசன பொறியியலாளரிடம் அது பற்றி கேட்கும்படி கூறியதாக 'தினக்குரல்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் கேட்டபொழுது அவர் உரிய பதில் எதுவும் கூறவில்லை. அதனால் இந்த விவகாரம் குறித்து இந்தத் திட்டத்தின் பொறுப்பாளர் பிறேம்குமாரிடம் வினவிய போது அவரும் உரிய விளக்கம் அளிக்கத் தவறிவிட்டார்.

அதிகாரிகளின் இந்த பொறுப்பற்ற அசமந்தப் போக்கைப் பார்க்கும் போது, இரணைமடு புனரமைப்பில் சில முறைகேடுகள் நடந்திருப்பது புலனாகின்றது. இவர்களே முறைகேடுகளைப் புரிந்துவிட்டு, பின்னர் 'இரணைமடு தண்ணீர் வீணாகின்றது' என அறிக்கையும் விடுவது மிகவும் கண்டனத்துக்குரியதாகும்.

மக்களின் வாழ்வுடன் விளையாடும் இத்தகைய அதிகாரிகளின் செய்கைகள் கண்டறியப்பட வேண்டும். அந்த அடிப்படையில் இந்த புனரமைப்புத் திட்டத்துக்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள், புனரமைப்பு வேலைகளை மேற்கொண்ட ஒப்பந்தக்காரர்கள் என அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் ஊழல்கார ரணில் அரசாங்கத்தை நம்பியிருக்காமல், ஜனாதிபதியும் அவரால் நியமிக்கப்பட்ட வட மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் அவர்களும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

***-சந்திரன்***

### சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 8

# பெண்கள் தினம் பிறந்த வரலாறு



சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்கள் முதன்முதலில் 1909 பெப்ருவரி 28 இல் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆரம்பமானதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. அன்றைய தினம் அமெரிக்காவில் நடைபெற்ற அமெரிக்க சோசலிசக் கட்சியின் மாநாட்டில் அதன் செயற்பாட்டாளர்களில் ஒருவரான தெரேசா மல்கியெல் (Theresa Malkiel) முன்வைத்த ஆலோசனைக்கிணங்க "தேசிய பெண்கள் தினம்" அனுஸ்டிக்கப்பட்டது. அதே நேரத்தில் 1857 மார்ச் 8 இல் அமெரிக்காவில் ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் ஊழியர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை நினைவுகூருமுகமாக இத்தினம் அனுஸ்டிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

1910 ஒகஸ்டில் டென்மார்க்கின் தலைநகரான கோபன்கேகனில் நடத்தப்பட்ட இரண்டாவது சர்வதேச சோசலிச மாநாட்டின் போது சர்வதேச சோசலிச பெண்கள் மாநாடும் நடத்தப்பட்டது. அமெரிக்க சோசலிசவாதிகளால் உந்தப்பட்ட ஜேர்மன் சோசலிசாதியான லூயிஸ் ஸியெற்ஸ் (Luise Zietz) வருடாவருடம் பெண்கள் தினத்தைக் கொண்டாட வேண்டும் என்ற ஒரு கருத்தை முன்வைத்தார். அதை இன்னொரு கம்யூனிஸ்ட் தலைவரான கிளாரா ஸெட்கின் (Clara Zetkin) வழிமொழிந்தார். ஆனால் பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதற்கான குறிப்பிட்ட திகதி நிர்ணயிக்கப்படவில்லை. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட 17 நாடுகளைச் சேர்ந்த 100 பெண்கள் இந்த தீர்மானத்தை ஏகமனதாக வரவேற்றனர்.

அதைத் தொடர்ந்து 1911 மார்ச் 19 இல் ஒஸ்ரியா, டென்மார்க், ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 1 மில்லியன் மக்கள் வரலாற்றில் முதல் தடவையாக சர்வதேச மகளிர் தினத்தை நினைவு கூர்ந்தனர். இதில் ஒஸ்ரிய - ஹங்கேரிய சாம்ராஜ்யத்தில் மட்டும் 300 ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஒஸ்ரியாவின் தலைநகர் வியன்னாவில் அணி வகுத்த பெண்கள் பரீஸ் கம்யூன் தியாகிகளை நினைவுகூர்ந்து பதாகைகளை ஏந்திச் சென்றனர். தமக்கு வாக்களிக்கும் உரிமையும், அரசாங்க பொறுப்புகளில் பங்கும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்திய பெண்கள், தொழில்தலங்களில் பாலின சமத்துவமின்மை ஒழிக்கப்பட வேண்டும் எனவும் கோரினர்.

**சுபத்ரா**

இதே நேரத்தில் அமெரிக்கர்கள் பெப்ருவரி மாதத்தின் கடைசி ஞாயிற்றுகிழமையை தேசிய பெண்கள் தினமாகக் கொண்டாடி வந்தனர். 1913 இல் ரஸ்யப் பெண்கள் பெப்ருவரி மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று (அப்போது ரஸ்யாவில் இருந்த ஜூலியன் நாட்காட்டியின்படி) முதல் தடவையாக சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர்.

1914 மார்ச் 8 அன்று (அது ஒரு ஞாயிற்றுக்கிழமை) ஜேர்மனியில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. பின்னர் அத்தினமே எல்லா நாடுகளிலும் சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்படும் நாளாக மாறியது.

1914 மார்ச் 8 அன்று லண்டனில் உள்ள றவ∴பல்கர் (Trafalgar Square) சதுக்கத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும்படி வலியுறுத்தி பெண்கள் அணி திரண்டனர். இதன்போது சில்வியா பான்ஹேஸ்ற் (Sylvia Pankhurst) என்ற செயற்பாட்டாளர் கைது செய்யப்பட்டார்.

1917 மார்ச் 8 இல் ரஸ்ய முடியரசின் தலைநகரான பெட்ரோகிராடில் முழு நகரையும் நிறைத்து ஆடைத் தொழிற்சாலைப் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிகழ்வே பின்னர் பெப்ருவரி புரட்சியின் தொடக்கமாகவும், அதைத் தொடர்ந்த ரஸ்ய புரட்சி தினமான ஒக்ரோபர் புரட்சியின் ஆரம்ப தினமாகவும் குறிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட ரஸ்ய பெண்கள் "பாணும் சமாதானமும் வேண்டும்" எனக் கோசம் எழுப்பியதுடன், உலக யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும், ஜார் ஆட்சி ஒழிக்கப்பட வேண்டும் எனவும் கோரினர்.

ருஸ்ய ஒக்ரோபர் புரட்சியைத் தொடர்ந்து போல்ஸ்விக்குகளான அலெக்ஸ்சான்டிரா கொலன்டே (Alexandra Kollontai - இவர் புரட்சிக்குப் பின்னர் லெனின் தலைமையில் அமைந்த

முதலாவது சோவியத் அமைச்சரவையில் இடம் பெற்ற முதல் பெண் அமைச்சராவார்) மற்றும் விளாடிமிர் லெனின் (Vladimir Lenin) ஆகியோர் இந்த தினத்தை சோவியத் யூனியனில் உத்தியோகபூர்வமான விடுமுறையாக அறிவித்திருந்த போதிலும், 1965 வரை இது ஒரு வேலைத் தினமாகவே இருந்தது. 1965 மே 8 இல்தான் இத்தினத்தை ஒரு விடுமுறை தினமாக சோவியத் அரசாங்கம் பிரகடனம் செய்தது.

ஆனால் 1917 இல் சோவியத் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து உலகம் முழுவதுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் இத்தினத்தை சர்தேச மகளிர் தினமாகக் கொண்டாடத் தொடங்கிவிட்டன. ஸ்பானியாவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்துக்கு மத்தியிலும் தலைநகர் மட்ரிட்டில் கம்யூனிஸ்ட் தலைவர் டொலோறெஸ் இபார்றுறி (Dolores Ibarruri) பெண்களின் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்.

சீனாவில் கம்யூனிஸ்ட்டுகள் இத்தினத்தை முதன்முதலாக 1922 இல் கொண்டாடினர். 1927 இல் அங்குள்ள குவாங்சோ நகரில் சுமார் 25,000 பெண்கள் அணிவகுத்துச் சென்றனர். 1949 ஒக்ரோபர் 1 இல் மக்கள் சீனக் குடியரசு ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு மார்ச் 8 ஆம் திகதியை அரை நாள் விடுமுறை தினமாக சீன அரசாங்கம் அறிவித்தது.

1967 வரை மார்ச் 8 ஆம் திகதி சோசலிச நாடுகளில் மட்டுமே விடுமுறை தினமாக இருந்து வந்தது. 1970கள் 80களில் பெண்கள் அமைப்புகள் இடதுசாரிகளுடன் இணைந்து எல்லாத்துறைகளிலும் பெண்களுக்கு சமவுரிமை கேட்டுப் போராடத் தொடங்கினர்.

ஐக்கிய நாடுகள் சபை முதன்முதலாக 1975 இல் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடத் தொடங்கியது. 1977 இல் ஐ.நா. உறுப்பு நாடுகள் இணைந்து மார்ச் 8 ஆம் திகதியை சர்வதேச மகளிர் தினமாகப் பிரகடனம் செய்தன.

சர்வதேச மகளிர் தினம் போராட்டங்களின் மத்தியில், குறிப்பாக சோசலிசவாதிகளின் முயற்சியாலேயே உருவாக்கப்பட்டது. அத்தினம் ஆரம்பமான காலகட்டத்தில் ஏகாதிபத்திய யுத்தம், வர்க்க ஒடுக்குமுறை, பாலின ஒடுக்குமுறை, சமூக ஏற்றத்தாழ்வு என்பனவற்றுக்கு எதிராகவே தனது ஈட்டிமுனையை குறி வைத்திருந்தது.

ஆனால் காலப்போக்கில் பெண்களின் எழுச்சியை தடுக்க முடியாத ஆளும் வர்க்கங்கள் தாமும் அத்தினத்தை சடங்காகக் கொண்டாடத் தொடங்கி அதன் உயரிய இலட்சியங்களை நீர்த்துப்போகச் செய்வதற்கு எத்தனித்து வருகின்றன. பல நாடுகளில் பெரும் முதலாளித்து கோப்பரேட் நிறுவனங்களே இத்தினக் கொண்டாட்டங்களின் அனுசரணையாளர்களாக செயற்படுவதிலிருந்து இதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆனால் சர்வதேச மகளிர் தினம் உருவாகி நூற்றாண்டைக் கடந்துவிட்ட போதிலும், பல நாடுகளில் புரட்சிகள் வெற்றிபெற்று சோசலிச அரசுகள் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், எண்ணற்ற நாடுகள் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டுவிட்ட போதிலும், பெண்கள் பலதுறைகளில் ஆண்களுக்குச் சமானமாக வந்துவிட்டு போதிலும், பெண்கள் மீதான பாலியல் ரீதியான ஒடுக்குமுறை இன்னமும் முற்றுப்பெறவில்லை.

அதை அடைவதற்கு இன்னமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. எப்பொழுது உலகிலிருந்து முதலாளித்துவமும் அதன் கொடுமுடியான ஏகாதிபத்தியமும் ஒழிக்கப்படுகின்றதோ அன்றுதான் உலகில் உண்மையான சமத்துவம் தோன்றுவதுடன், பெண்களுக்கும் உண்மையான சம வாழ்வு கிடைக்கும்.

# ஊடகச் செய்திகளுக்கூடாக வெளிவரும் உண்மைகள்!

## இலங்கையின் முயற்சியை பாராட்டியது சர்வதேச நாணய நிதியம்

நாட்டில் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து, பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தைச் சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்ல, இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டியுள்ளனர்.

மான்யூலா கோரேட் (Manuela Gorett) தலைமையிலான நிதியத்தின் பிரதிநிதிகள், கடந்த 14ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்கள் பற்றி, அக்குழு அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை முழுமையாக பூர்த்தி செய்ய, மேலதிகமாக ஒரு வருடத்தை அவகாசமாக வழங்குமாறு, இலங்கை அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைக்கு, சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நிதி வசதிகளைப் பன்படுத்தி, 2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இதற்கமைய, ஐந்தாவது மீளாய்வுக் கூட்டம், எதிர்வரும் மே மாதத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளது. பொருளாதார நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருந்தாலும், உரிய குறைபாடுகள் தற்சமயம் நீங்கிவருகின்றன என்று, சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நன்றி: தமிழ்மிரர்**

இலங்கைக்கு வழங்கப்படும் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் சலுகையை மேலும் ஒரு வருடத்தால் நீடிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் சலுகையில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்கனவே 5 தவணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைய எஞ்சியுள்ள 500 மில்லியன் டொலரை ஒரு வருடத்திற்குள் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பொருளாதார மறுசீரமைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை இடைக்கிடையே மீளாய்வு செய்து, நிதியத்தின் நிறைவேற்றுக்குழு கடனை

விடுவிப்பது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுத்துள்ளது. (செய்தி)

**'வானவில்' குறிப்பு:** ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை உலக வட்டிக் கடைகளில் ஒன்றான சர்வதேச நாணயம் பாராட்டி இருப்பதைப் பார்க்கும் போது, கடந்த வருடம் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலைக்குப் பின்னர் மீண்டும் ஆட்சிபீடம் ஏறிய ஐ.தே.க. அரசு வேகமாக மேற்கத்தைய சார்பு பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பது தெளிவாகின்றது. அதனால்தான் மீண்டும் நிதியமைச்சராகப் பொறுப்பேற்ற கையோடு மங்கள சமரவீர வாசிங்டனுக்கு பறந்தோடினார். அதேபோல, மங்களவின் 30 வருட அரசியல் 'சேவை'யைப் பாராட்ட அமெரிக்காவின் முன்னாள் ஜெனீவாவுக்கான பிரதிநிதி சமந்தா பவர் அம்மையார் அண்மையில் கொழும்புக்கு பறந்து வந்தார்.

# போரை நிறுத்தாவிடில் போர்க் குற்றச்சாட்டை எதிர்கொள்ள நேரிடுமென அமெரிக்கா எச்சரித்தது!

***கலாநிதி மொகான் சமரநாயக்க***

அமெரிக்காவின் பேச்சைக்கேட்டு போரை நிறுத்தாவிட்டால், போர்க் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று வெளிவிவகார அமைச்சராக இருந்த ரோஹித போகொல்லாமாவிடம் அமெரிக்க தூதுவர் றொபேர்ட் பிளேக் எச்சரித்திருந்தார் என்று கலாநிதி மொகான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் ஆய்வாளரும், மகிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்தபோது, அவரது ஊடகப் பேச்சாளராகப் பதவி வகித்தவருமான மொகான் சமரநாயக்க, கொழும்பில் 'எலிய' அமைப்பினால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் கால் வைப்பதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதற்கான அவர்களது மூலோபாயத்தின் ஒரு பகுதியாகவே ஜெனீவாவில் கொண்டு வரப்படும் தீர்மானங்களாகும்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னதாக, போரை நிறுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் பேச்சைக்



Mohan Samaranayake

கேட்காவிட்டால், போர்க் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று, கொழும்பில் இருந்த அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக், இலங்கை வெளிவிவகார அமைச்சராக இருந்த ரோஹித போகொல்லமாவை எச்சரித்திருந்தார் என்று கூறினார்.

**நன்றி: தினக்குரல்**

**'வானவில்' குறிப்பு:** கலாநிதி மொகான் சமரநாயக்கவின் மேற்படி கருத்தைப் பார்க்கும் போது ஒரு உண்மை தெளிவாகின்றது. அதாவது புலிகளுக்கு எதிரான போரை நிறுத்துவதற்கு அமெரிக்கா கடும் பிரயத்தனம் எடுத்திருக்கிறது என்பதும், அதற்காக இலங்கை அரசாங்கத்தின் மீது பயமுறுத்தலுடன் கூடிய அழுத்தத்தைப் பிரயோகித்திருக்கிறது என்பதும் தெளிவாகின்றது.

சரி, அமெரிக்காவின் வேண்டுகோளை ஏற்று புலிகளுக்கு எதிரான போரை நிறுத்தியிருந்தால் என்ன நடந்திருக்கும்? யுத்தம் மேலும் தொடர்ந்திருக்கும். யுத்தம் முடிவுற்ற இந்த 10 வருட காலத்தில் மேலும் குறைந்தது ஒரு இலட்சம் பேர் என்றாலும் செத்து மடிந்திருப்பர். இலங்கையின் பொருளாதாரம் மேலும் அதளபாதாளத்துக்குச் சென்றிருக்கும். தமிழ் மக்கள் எவ்வித சுதந்திரங்களும் அற்று புலிகளின் கொத்தடிமைகளாக தொடர்ந்தும் இருந்திருப்பர்.

இந்த நிலைமையை மகிந்த அரசு இல்லாமல் செய்ததால்தான் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் இலங்கை மீது வன்மம் தீர்ப்பதற்காக ஜெனிவாவில் தாம் எச்சரித்தவாறே போர்க் குற்றச்சாட்டுகளை முன் வைத்திருக்கின்றன போலும்.

# 'இலங்கைத் தமிழரசுக் கட்சி இரத்தக்கறை படிந்த கட்சி'

இலங்கைத் தமிழரசுக் கட்சியும், இரத்தக்கறை படிந்த கட்சி தான் என, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நகரிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தில், நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், அந்தக் காலத்தில் தமிழரசுக் கட்சிக்கு மாற்றுக் கருத்துடையவர்களுக்கு இயற்கை மரணமல்ல செயற்கை மரணம் தான் என்றே அக் கட்சியினர் கூறுவார்களெனவும் ஏனெனில் அந்தக் கட்சிக்கு எதிராக ஏதும் சொன்னால் கொல் என்று அல்லது கொலை என்று தான் அர்த்தமாகுமெனவும் தெரிவித்தார். இது அந்தக் கட்சியின் தலைவராக அமிர்தலிங்கம் இருந்த காலத்தில் நடந்திருக்கின்றனவெனத் தெரிவித்த அவர், இவ்வாறு அக்கட்சி மீது பல விடயங்கள் இருக்கின்றனவெனவும் கூறினார்.

நன்றி: தமிழ் மிரர்

**'வானவில்' குறிப்பு:** 'தளபதி' அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராக இருந்த காலத்தில்தான் 'துரோகி' அல்பிரட் துரையப்பாவைச் சுட்டு முதலாவது அரசியல் படுகொலை அரங்கேற்றப்பட்டது என்பது அவர்களுக்குப் பெருமைதானே?

**முன்பக்கத் தொடர்ச்சி...**

பெயரில் மோசடியில் ஈடுபட்டு தனது ஆட்சிக்காலத்தை சர்வாதிகாரத்தனமாக நீடித்துக் கொண்டவர் என்பதை நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. அத்தகைய ஒரு கேடுகெட்ட ஜனநாயக விரோதச் செயலை சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் ஒருபோதும் செய்யவில்லை.

அந்தப் பாரம்பரியத்தில் வந்த ஜே.ஆரின் மருமகன் ரணிலும் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதும், முடியுமானால் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தாமல் இழுத்தடிப்பதும் நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார். ஜனாதிபதித் தேர்தலை மட்டும் உரிய காலத்துக்கு முன்னர் நடத்துமாறு ஐ.தே.க. கோருவதன் நோக்கம், தமக்கு எதிரான மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருப்பதனாலேயாகும்.

ஆனால், எந்தத் தேர்தல் நடந்தாலும். அது ஜனாதிபதி தேர்தலாக இருந்தாலென்ன, நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலென்ன, மாகாண சபைத் தேர்தலாக இருந்தாலென்ன, ஐ.தே.கவைத் தோற்கடித்து அந்தக் கட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கு மக்கள் தயாராகக் காத்திருக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை.

மக்கள் ஐ.தே.கவைத் தோற்கடிப்பதற்கு தயாராக இருந்தாலும், ஐ.தே.கவுக்கு எதிரான சக்திகள் அதற்காக மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. ஏனெனில் பலவிதமான சூழ்ச்சிகள் மூலம் தேர்தல்களில் வென்ற வரலாறு ஐ.தே.கவுக்கு உண்டு. அதுமட்டுமல்ல, ஐ.தே.கவை வெற்றி பெற வைப்பதநற்கு வெளிநாட்டு ஏகாதிபத்திய சக்திகள் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுவார்கள் என்பதும் திண்ணம். கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையின் போது இதை நாம் கண்கூடாகக் கண்டோம்.

ஐ.தே.கவினர் தமக்கு எதிரான சக்திகளை வீழ்த்துவதற்கு பலவிதமான சூழ்ச்சிகளைக் கையாளுவார்கள். அதில் ஒன்று வெளிப்படையானது. அதாவது பிற்போக்கான அரசியல் கட்சிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் கட்சிகள், சில மலையகக் கட்சிகள் என்பனவற்றைத் தம்முடன் வைத்திருப்பது. இன்னொரு உத்தி அரசியல் சந்தர்ப்பவாதிகளான ஜே.வி.பியைப் பயன்படுத்துவது.

இதைவிட மறைமுகமான சில தந்திரோபாயங்களையும் ஐ.தே.க. கையாளும். அதில் முக்கியமானது எதிரணியில் முரண்பாடுகளையும் உடைவுகளையும் ஏற்படுத்துவது. 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது சந்திரிக குமாரதுங்க மூலம் ஐ.தே.க. அதைச் செய்தது. அதற்கு இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பலிக்கடாவாக்கப்பட்டார்.

மைத்திரி இன்று தனது தவறை உணர்ந்து ஓரளவு சரியான பாதைக்கு வந்துவிட்டாலும், சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன்னமும் ஒரு ஐந்தாம் படையை ஐ.தே.க. வைத்திருக்கிறது. அண்மையில் நாடாளுமன்றத்தில் நடந்த வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது இதை அவதானிக்க முடிந்தது. கூட்டு எதிரணி மக்கள் விரோத வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்த போது, சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுமார் 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாது தவிர்த்ததின் மூலம், வரவு செலவுத் திட்டம் நிறைவேற மறைமுகமாக உதவினர். இத்தகைய சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் பதவிப் பித்துப் பிடித்தவர்கள், இன்னொரு பகுதியினர் ஐ.தே.கவின் கொள்கையுடன் ஒத்துப்போகக் கூடியவர்கள்.

இவர்கள் தவிர, பண்டாரநாயக்கர்களின் புதல்வி என்ற வகையிலும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவி மற்றும் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையிலும் சந்திரிக குமாரதுங்கவும் ஒரு பகுதி சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் மத்தியில் செல்வாக்கைக் கொண்டிருப்பதுடன், ஐ.தே.கவுக்கு எதிரான சக்திகள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் முயற்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டிருக்கிறார்.

இவை ஒருபுறமிருக்க, ஜனாதிபதி மைத்திரி தவறை உணர்ந்து ஓரளவு சரியான பாதைக்கு வந்துவிட்டாலும், ஐ.தே.கவுக்கு எதிரான சக்திகள் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சிறீலங்கா பொது பெரமுன என்ற இரண்டு அணிகளாகப் பிளவுபட்டு நிற்கின்றன. இந்த இரண்டு அணிகளையும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், இரு கட்சிகளுக்குள்ளும் உள்ள சில சக்திகள் அந்த முயற்சிகளுக்கு குழிபறிக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

எது எப்படியிருந்த போதிலும், நாட்டினதும் மக்களினதும் நலன்களை விட அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் நலன்களை முதன்மைப்படுத்திச் செயற்படுகின்ற ஐ.தே.கவை நாட்டின் சகல அதிகார அலகுகளில் இருந்தும் அப்புறப்படுத்துவது மிக அவசியமான கடமையாகும். அப்படி அப்புறப்படுத்துவதற்கான தேவை பின்வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டது.

ஐ.தே.க. அது தோற்றம் பெற்ற காலத்திலிருந்து ஏகாதிபத்திய சார்பு தேசத்துரோகக் கட்சியாகவே செயற்பட்டு வருகின்றது.

ஜனநாயகத்தை வாயளவில் உச்சரித்துக் கொண்டு நடைமுறையில் பல சந்தர்ப்பங்களில் எதேச்சாதிகார நடைமுறையையே பின்பற்றி வந்திருக்கிறது.

நாட்டின் ஏகப் பெரும்பான்மையான மக்களின் நலன்களை விட அந்திய உள்நாட்டு பெரும் முதலாளித்துவ சக்திகளின் நலன்களுக்காகவே செயற்பட்டு வருகின்றது.

சிறுபான்மை தேசிய இனங்களின் மீதான ஒடுக்குமுறையைத் தொடக்கி வைத்ததுடன், இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சகல முயற்சிகளையும் குழப்பியடித்து, நாட்டில் சிறுபான்மை இனங்களுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு எதிரான சகல இன வன்செயல்களையும் முன்னின்று நடத்தியதுடன், நாட்டைப் பேரழிவுக்கு உள்ளாக்கிய 30 வருடப் போரைத் தொடக்கி வைத்த கட்சியுமாகும்.

இத்தகைய ஒரு கட்சி நாட்டை ஆள்வதற்கு எந்திவிதத் தகுதியும் இல்லாதது. இந்தக் கட்சி இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் சகல மக்களினதும் பொது எதிரியாகும். இத்தகைய ஒரு கட்சியை குப்பைக்கூடைக்குள் தூக்கியெறிவதே சரியானதாகும்.

இந்த மகத்தான கடமையை நிறைவேற்றுவதானால், நாட்டிலுள்ள சகல ஐ.தே.க. எதிர்ப்புச் சக்திகளும்

தமது குறுகிய அரசியல் வேறுபாடுகளை மறந்து ஓரணியில் திரண்டு நின்று செயற்பட வேண்டும்.

குறிப்பாக, ஐ.தே.கவுக்கு எதிரான பிரதான கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சிறீலங்கா பொதுஜன பெரமுன என்பன ஐக்கியப்படுவதுடன், சகல இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக மற்றும் தேசபக்த கட்சிகளும் அவ்வணியில் இணைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் ஐ.தே.கவை எதிர்வரும் தேர்தல்களில் சுலபமாக வென்றுவிடலாம் என்ற மெத்தனத்தில் இருப்போமேயானால் அது சில வேளைகளில் தவறான கணிப்பாகவும் முடிந்துவிடலாம்.

இந்த இடத்தில் சீனப் புரட்சியின் தந்தையான மாஓசேதுங் அவர்களின் அறிவுரையை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர் சொல்கிறார்:

“நீண்டகால நோக்கில் நாம் எதிரியை எப்படியும் தோற்கடித்துவிட முடியும் என்ற திடமான நம்பிக்கையில் இருக்கின்றோம். ஆனால் ஒவ்வொரு சமரின் போதும் அவனை பாதூரமாகக் கணக்கில் எடுத்து அவனுடன் போரிட வேண்டும்”

ஐ.தே.கவுக்கு எதிரான எமது இன்றைய போராட்டத்துக்கும் இது பொருந்தும்.

# கையறு நிலையில் ஜனாதிபதியின் அழுகை!

“இந்த அரசாங்கத்தில் நான் சொல்வதை எவருமே செவிமடுப்பதாக இல்லை” என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புலம்பித் தள்ளியிருக்கிறார்.

பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ எழுதிய “வைஸ்ரோய் விசேடம்” (Viceroy Special) என்ற நூலின் சிங்கள மொழிபெயர்ப்பின் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே ஜனாதிபதி தனது மன ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

“கொழும்பு – கண்டி அதிவேக நெடுஞ்சாலை நிருமாணப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் எனது ஆலோசனையைப் புறக்கணித்துவிட்டு, தொடர்ந்து மலைகளை சேதப்படுத்தி சுற்றுச்சூழலை நாசமாக்கி வருகிறார்கள். நான் ஒரு பொறியியலாளன் அல்ல. ஆனால் சுற்றுச்சூழலை நேசிப்பவன் என்ற வகையில் இந்த நெடுஞ்சாலையை எப்படி நிர்மாணிக்க வேண்டும் என்ற எனது ஆலோசனையை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கியிருந்தேன்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் அம்பேபுஸ்ஸவிலிருந்து குருநாகலுக்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்ட பொழுது, மலைகளைுக்கு சேதம் ஏற்படுவதைத் தவிர்த்து எவ்வாறு அந்த நெடுஞ்சலையை அமைப்பது என சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தேன்.

இன்றும் கூட குருநாகலையிலிருந்து கண்டிக்கு 35 நிமிடங்களில் செல்ல முடிகிறது. எனவே தற்பொழுது குருநாகல் - கண்டி வீதியை அகலப்படுத்தும் பொழுது மலைகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு செயற்படும்படி வேண்டியிருந்தேன். ஆனால் அவர்கள் எவரும் எனது பேச்சைக் கேட்பதாக இல்லை”

இவ்வாறு தனது கையறு நிலையை ஜனாதிபதி மைத்திரி தெரிவித்திருக்கிறார்.

7ம் பக்கத்தொடர்ச்சி...

திட்டத்தை இந்தியாவும் அவதானித்துள்ளதையே இது உணர்த்துகிறது.

புதிய அரசியல் அமைப்பு மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என்ற பொய்ப்பிரச்சாரத்தின் மூலம், தற்பொழுது நடைமுறையில் உள்ள மாகாண அடிப்படையிலான அதிகாரப் பகிர்வையும் இல்லாமல் செய்வதற்கே ஐ.தே.க. அரசும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் முற்படுகின்றன என்பதே உண்மையாகும்.

# தோழர் இராமசாமி ஐயரின் துணைவியார் ருக்மணி அம்மாள் காலமானார்!

இலங்கையின் வடபுலத்தில் தோழர் மு.கார்த்திகேசன் அவர்களுடன் இணைந்து 1940 களின் நடுப்பகுதியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தோற்றுவித்த நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற தோழர் இராமசாமி ஐயரின் துணைவியார் திருமதி ருக்மணி அம்மாள் இராமசாமி ஐயர் அவர்கள் 12 – 03 – 2019 அன்று அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இறக்கும் போது அவருக்கு வயது 94.

தோழர் இராமசாமி ஐயர் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே தமது 45 ஆவது வயதில் காலமாகிவிட்டிருந்தார். இராமசாமி ஐயர் தமது முற்போக்கு சிந்தனைகள் காரணமாக இளமைப் பருவத்திலேயே தோழர் கார்த்திகேசன் வடபுலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபிக்க வந்தபோது அவருடன் ஆரம்பகாலத்தில் இணைந்து செயற்பட்ட சிலரில் ஒருவராவார்.

கார்ல் மார்க்சாலும், பிரெடரிக் ஏங்கல்சாலும் வெளியிடப்பட்டு, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதல் ஆவணமாக இன்றுவரை கருதப்படும் ‘கம்யூனிஸ்ட் அறிக்கை’யை 1950 ஆம் ஆண்டளவில் நீர்வேலியைச் தோழர் எஸ்.கே. கந்தையா அவர்களுடன் இணைந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட பெருமைக்குரியவர் தோழர் இராமசாமி ஐயர். அத்துடன் ‘லலிதவிலாச புத்தகசாலை’ என்ற பெயரில் ஒரு புத்தக நிலையத்தையும் நடத்தி வடபுல மக்கள் மத்தியில் மார்க்சிச நூல்களையும் பரப்பி வந்தவர். குறுகிய காலமே வாழ்ந்தாலும் வடபுலத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை கட்டியெழுப்புவதில் காத்திரமான பங்களிப்பை வழங்கியவர். அத்தகைய ஒரு மகத்தான தோழரின் உற்ற துணைவியாக வாழ்ந்தவர் காலஞ்சென்ற ருக்மணி அம்மாள்.

அத்தகைய பெருமை வாய்ந்த ருக்மணி அம்மாளின் மறைவுக்கு ‘வானவில்’ சார்பாக எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது பிரிவால் வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**–ஆசிரிய குழு**

# ‘சீன கடன்பொறி’ குறித்து பாட்டுப் பாடி நடனமாடியவர்கள் எங்கே?

### டியு குணசேகர கேள்வி

“சீன கடன் பொறிக்குள் இலங்கை சிக்கியுள்ளதாக கூப்பாடு போட்ட சிலர் இப்பொழுது இலங்கை அரசாங்கம் சர்வதேச பிணை முறி சந்தை நிறுவனங்களிடம் இருந்து 7 சத வீத வட்டிக்கு பணம் பெற்ற போது எங்கே போய்விட்டார்கள்?” என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டியு குணசேகர கேள்வி எழுப்பியிருக்கிறார். அண்மையில் சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தில் சீன – தாய்வான் பிரச்சினை சம்பந்தமாக சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தும் போதே குணசேகர இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்.

இந்த சொற்பொழிவை இலங்கை – சீன நட்புறவுச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. அங்கு தொடர்ந்து உரையாற்றிய டியு குணசேகர கூறியதாவது:

“நான் நீண்ட காலம் அமைச்சராக இருந்தவன் என்ற வகையில் நாங்கள் எத்தனை வீத வட்டிக்கு கடன் வாங்குகிறோம் என்பது எனக்குத் தெரியும். சீனா எமக்கு வழங்கும் பெரும்பாலான கடன்களுக்கு 1 முதல் 2 வரையிலான வீத வட்டியே அறிவிடப்படுகிறது. அதே நேரத்தில் சர்வதேச நிதிச் சந்தைகளில் நாம் கடன் வாங்கும் போது 6 முதல் 8 வீதம் வரை வட்டி அறிவிடப்படுகிறது. அண்மையில் நிதியமைச்சர் மங்கள



DEW Gunasekara

சமரவீர இந்த சந்தைகளில் 7.8 சத வீத வட்டிக்கு கடன் வாங்கியிருக்கிறார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் தொகையில் சீனாவின் கடன் 10 சத வீதம் மட்டுமே. அதே நேரத்தில் சர்வதேச சந்தைகளில் பெற்ற கடன் 50 சத வீதம் ஆகும்.

மறுபக்கத்தில் சீனாவின் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு சராசரியாக 19 வருடங்கள் வரையான கால அவகாசம் வழங்கப்படுகிறது. ஆனால் இதர சர்வதேச நிறுவனங்கள் கிட்டத்தட்ட 7 வருடங்களே கால அவகாசம் வழங்குகின்றன. ஒப்பிட்டுப் பார்க்கையில் சீன கடன்கள் மலிவானதும் இலகுவில் திருப்பிச் செலுத்தக்கூடியதுமாகும். ஆனால் சர்வதேச அளவில் சீனக் கடன்கள் பற்றி தவறான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதைக் கேட்டு நாங்கள் முட்டாள்கள் ஆகக்கூடாது.

இலங்கையின் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் உள்கட்டமைப்பு அபிவிருத்தி முக்கியமானது என்றபடியால், ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அது பெரு வளர்ச்சி பெற்றது. ஆனால் உள்கட்டமைப்பு வளர்ச்சியுடன் இணைவாக சில கைத்தொழில்களை ராஜபக்ச அரசாங்கம் திட்டமிடத் தவறியதால் சில தவறுகள் இழைக்கப்பட்டன.

இந்த நாட்டில் உள் தொடர்பிணைப்பை அதிகரிக்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது. ஒரு நபர் காலியிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதானால் ஏறத்தாழ 12 மணி நேரம் எடுக்கின்றது. இலங்கையின் அளவைப் பார்க்கையில் இது நகைப்புக்கிடமானது. நாங்கள் நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் என்பனவற்றைக் கொண்டிருப்போமேயானால், உள்நாட்டுப் பயண நேரம் மீதமாவதுடன், ஏற்றுமதிச் செலவுகளும் குறைவடையும்.”

இவ்வாறு டியு குணசேகர தமது உரையில் குறிப்பிட்டார்.

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மாறான புதியச் சட்டம் ஆபத்தானது

பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மாறான புதிய சட்டம் ஊடக செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமையுமென தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜீ.எல்.பீரிஸ், தகவல் பரிமாற்றமும் இச்சட்டத்துக்கமைய பயங்கரவாத செயலாக கருதப்படும் என்றார்.

எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை 26.03.2019இல் சந்தித்த போதே, ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்.

இதன்போது பயங்கரவாதச் தடுப்புச் சட்டத்துக்கு மாறாக கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டத்தில் மறைமுகமாக குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளை முன்னாள் அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் ஊடகப் பிரதானிகளுக்கு எடுத்துரைத்தார்.

தொடர்ந்துரைத்த அவர், இச்சட்டத்தின் மூலம் தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகளையும் முடக்கும் முயற்சிகள் இடம்பெறுவதாகவும், ஒருவரிடமிருந்து தகவல் பெற்று அவற்றை மற்றவர்களுக்கு வழங்குவது இச்சட்த்தின் பிரகாரம் பயங்கரவாதத்துக்கு துணைபோகும் செயலென கருதப்படுவதாகவும் தெரிவித்த அவர், தற்கால ஊடகச் செயற்பாடுகளையும் இச்சட்டத்தின் பிரகாரம் பயங்கரவாத செயற்பாடுகளாக காண்பிக்க முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக தற்போதைய அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நீக்குவதற்கு, தமது அரசாங்கத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர், இன்னும் 6 மாதங்களே குறித்த சட்டம் அமுலில் இருக்கும் என்றார்.